அதில் இனாத்துக்கான்பட்டி என்ற கிராமம், அந்த விமான படைதளத்திற்குள்ளேயே இருக்கின்ற காரணத்தால், விமான ஓடுபாதையை நீட்டிப்பதற்கு தகுதியற்றதாக இருக்கிறது. அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று அரசே விரும்புகிறது. எங்களுடைய ஆட்சி காலத்திலும் அதை விரும்பினோம். அதற்கான இடத்தைத் தேர்வு செய்து கொடுக்கிறபோது, அந்த இடத்தில் இருக்கிற சில பேர் அதைக் கொடுக்காமல் உயர் நீதிமன்றத்தில் தடை பெற்றுவிட்டார்கள். அங்கேயிருக்கிற 146 குடியிருப்புதாரர்களுக்கும் இந்த அரசாங்கம் உடனே பரிசீலனை செய்து, மாற்று இடம் வழங்குமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஓ) திருவண்ணாமலை மாவட்டம், குப்பநத்தம் அணை, மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஜவ்வாதுமலை அடிவாரத்திலே குப்பநத்தம் அணை கட்டப்பட்டது. அந்த அணை கட்டுகிறபொழுது அங்கேயிருந்த மலைவாழ் மக்கள் 150 பேரை அந்த இடத்திலிருந்து மாற்றி பொதுப் பணித் துறையின் மூலமாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வீடு கட்டப்பட்டிருக்கிறதேயொழிய, 10 ஆண்டு காலமாக அவர்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. தங்களை காலி செய்யச் சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் அங்கே நிலவுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்குப் பட்டா வழங்கும்படி தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஐ) வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு*

விரைந்து செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இனாத்துக்கான்பட்டி கிராம மக்களுடைய மீள்குடியமர்வுக்காக மாற்று இடமும் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஓ) திருவண்ணாமலை மாவட்டம், குப்பநத்தம் அணை, மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள், அணை கட்டுவதற்காக ஆக்கிரமிப்பு செய்திருக்கிற நிலங்களுக்குப் பதிலாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதனுடைய வகைப்பாடு என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து, தகுதியானவர்களுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. அவர்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. வகைப்பாடு சட்டத்திற்குட்பட்டு அது இருக்குமேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

(ஔ) கிள்ளியூர் தொகுதி, நீரோடி கிராமம், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17 ஆம் தேதியன்று கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீரோடி துறையிலிருந்து, ஸ்டான்லி, நிகோலஸ், ராஜு, சகாயராஜ் மற்றும் ஜான் பாஸ்கோ ஆகிய 5 பேர் கொல்லம் நீண்டகரை துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச்*